அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

21	T	I

இரண்டாம் தவணை பரீட்சை – தரம் 13 – 2020

Second Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : .....

பொருளியல் I
Economics I

காலம் : 2 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**
- **பல்தேர்வு வினாக்கள் தொடர்பில் மிகப்பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

01. பொருளாதாரமின்மைப்பண்டமொன்றுடன் ஒப்பிடும்போது பொருளாதார பண்டமொன்றை வரையறை செய்யும் பண்பொன்று அல்லாதது எது?
1. உற்பத்தி செயற்பாடொன்றின் முடிவாகும்.
2. அமயச் செலவு பூச்சியமாகும்.
3. உரிமை மாற்றும் திறன்
4. எல்லைச் செலவு குறைந்து செல்லல்
5. அருமை காணப்படல்.

02. பொருளாதாரமொன்று நுகர்வு மற்றும் முதலீட்டு பண்டங்களை உற்பத்தி செய்வதாக கருதுக. அத்தோடு உற்பத்தி இயல் தகவு வளையியொன்றின் புள்ளியொன்றில உற்பத்தியில் செயற்படுவதாக கருதி உற்பத்தி செய்யப்படும் நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியளவில் அதிகரிப்பு ஏற்படும் போது,
1. மூலதனப் பொருள் உற்பத்தி வீழ்ச்சியடையும்
2. மூலதனப் பொருள் அமயச் செலவு அதிகரிக்கும்.
3. மூலதனப் பொருள் நிரம்பலுக்கு எவ்வித தடையும் ஏற்படாது.
4. மூலதனப் பொருள் குறிக்கப்பட்ட அச்சில் மட்டும் வளையி இடது பக்கம் நகரும்.
5. உற்பத்தி சாத்திய வளையி இடதுபுறம் நகரும்.

03. மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமையொன்றில் காணக்கூடிய முக்கிய பண்புகளில் ஒன்று.
1. சந்தைப் பொருளாதார முறைமையிலும் பார்க்க உச்ச வினைத்திறன் கொண்டது.
2. பொருளாதார விருத்தி மீது தாக்கம் செலுத்தும் முக்கிய தடையாக அமைவது தனியுரிமை காணப்படுவதாகும்.
3. ஒப்பீட்டு (சார்பு) விலை அடிப்படையில் வளப்பங்கீடு நடைபெறல்.
4. வருமானம் மற்றும் செல்வம் என்பன சமமின்றி பங்கீடு செய்யப்படல்.
5. பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி தீர்மானங்கள் அரச திட்டமிடல் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும்.


04. நிறுவனமொன்று வளங்களை ஒதுக்கீடு செய்வதில் வினைத்திறனை உச்சமட்டத்தில் பேணும் போது
1. மொத்த வருமானம் மொத்தச் செலவுக்கு சமனாகும்.
2. எல்லை வருமானம் எல்லைச் செலவுக்கு சமனாகும்.
3. எல்லை வருமானம் எல்லைச் செலவிலும் அதிகமாகும்.
4. விலை எல்லைச் செலவுக்கு சமனாகும்.
5. விலை சராசரி மொத்தச் செலவுக்கு சமனாகும்.

05. நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும் போது "X" பொருளன் கேள்வி குறைவதோடு, "Y" பொருளின் விலை வீழ்ச்சியடையும் போது கேள்வித்தொகை வீழ்ச்சியடைவதாக கருதுக. இக்கருதுகோள்படி " X " மற்றும் " Y " பொருட்கள் தொடர்பான சரியான கூற்றினை தெரிவு செய்க.
1. " X " பொருள் இழிவுப பொருளாகும் போது " Y " பொருள் பொதுப் பொருளாகும்.
2. " X " பொருள் இழிவுப் பொருளாகும் போது " Y " பொருள் நுகர்வுப் பொருளாகும்.
3. " X " மற்றும் " Y " பொருட்கள் இரண்டும் கிபன் பொருட்களாகும்.
4. " X " பொருள் இழிவுப் பொருளாகும் போது " Y " பொருள் கிபன் பொருளாகும்.
5. " X " பொருள் கிபன் பொருளாகும் போது " Y " பொருள் இழிவுப் பொருளாகும்.

06. கீழ் நோக்கி சரிந்து செல்லும் சாதாரண கேள்விக் கோட்டின் வெவ்வேறு புள்ளிகள் மீது வெவ்வேறு நெகிழ்வு பெறுமதி கிடைப்பது.
1. சரிவு நேர்ப்பெறுமதி பெறுவதினாலாகும் 2. சரிவு இடத்துக்கிடம் மாறுபடுவதாகும்.
3. சரிவு எதிர்ப்பெறுமதி பெறுவதினாலாகும்
4. விலை மற்றும் கேள்வித்தொகை இடத்துக்கிடம் மாறுபடுவதினாலாகும்.
5. விலை மற்றும் கேள்வித் தொகையிடையே எதிரக்கனியத் தொடர்பு ஏற்படுவதினாலாகும்.

07. சந்தையொன்றில் நிரம்பல் செய்யப்படும் "X" பொருளின் நிரம்பல் கோடு " X " பொருளினது தொகைகள் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் இழிவு விலைகளைப் பிரதி பலிக்கும் வளையியாகும். நிரம்ல் செய்வோரால் எதிர் பார்க்கப்படும் இழவு விலை மட்டங்கள் அதிகரித்து செல்வதற்கு பின்வரும் எக்காரணம் அடிப்படையாக அமையும்.?
1. உற்பத்தி நுட்பமுறைகளில் விருத்தி ஏற்படல்
2. உற்பத்தியாளர்களில் ஒரு பகுதியினர் சந்தையிலிருந்து வெளியேறல்
3. நிரம்பலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.
4. பொருளை நிரம்பல் செய்யும் உச்சவிலை நிர்ணயித்தல்.
5. உற்பத்தியாளர்களது பொருள் உற்பத்தி வாய்ப்பு விலை வீழ்ச்சியடைதல்.

08. " X " மற்றும் "Y எனும் இரு பொருட்கள் தொடர்பான சாதாரண கேள்விக் கோடுகள் கீழே தரப்பட்டுள்ளன.



P_1 விலையில் இரு பொருட்கள் தொர்பாகவும், எக்கூற்று சரியானதாகும்?

1. K,E இருபுள்ளிகளிலும் நெகிழ்ச்சி ஒன்றிலும் குறைவாகும்.
2. K,E இருபுள்ளிகளிலும் நெகிழ்ச்சி ஒன்றிலும் கூடியதாகும்.
3. K,E இருபுள்ளிகளிலும் நெகிழ்ச்சி பெறுமானம் சமனாகும்.
4. E புள்ளியில் நெகிழ்ச்சி K புள்ளியை விட அதிகமாகும்.
5. E புள்ளியில் நெகிழ்ச்சி K புள்ளியை விட குறைவாகும்.

09. போட்டிச்சந்தையொன்றில் நிரம்பல் செய்யப்படும் பொருளொன்று தொர்பாக சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளின் சார்புகள் பின்வருமாறு,

Qd = 110 – 4P Qs = -10 + 2P

சந்தை சமநிலை அடையும் போது விலைசார் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதி,

1. - 0.46 2. - 0.20 3. – 2.66 4. - 1.33 5. – 2.25


10. கேள்வி மற்றும் நிரம்பல் விதிகளை பேணும் சந்தையொன்றில் கேள்வி மற்றும் நிரம்பல் கோடுகளைக் கொண்ட பொருளொன்றின் உள்ளீடுகளது விலை வீழ்ச்சியடைவதன் விளைவாக ஏற்படுவது,
1. நிரம்பல் கோடு வலப்புறம் நகரல்
2. சமநிலை விலை மற்றும் சமநிலைத்தொகை அதிகரித்தல்
3.. சமநிலை விலை வீழ்ச்சயடைதல் மற்றும் சமநிலத்தொகை அதிகரித்த்ல்.
4. சமநிலை விலை அதிகரித்தல் மற்றும் சமநிலைத் தொகை வீழ்ச்சியடைதல்
5. சமநிலை விலை மற்றும் சமநிலை தொகை வீழ்ச்சியடைதல்.

11. போட்டிச் சந்தையொன்றில் சந்தைப்படுத்தப்படும் பொருளொன்றின் விலை ரூபா. 80 ஆக இருக்கும் போது நிரம்பல் தொகை 600 அலகுகளாகும் என்ற சந்தை சமநிலை நிலவுவதாக கருதுக. இப்பொருளுக்கு ரூபா 60 உச்சவிலையாக அரசு நிர்ணயிக்குமாயின், ஏற்படும் தாக்கமாக அமைவது. சந்தையில்,
1. மகை கேள்வி ஏற்படும். 2. மிகை நிரம்பல் ஏற்படும் 3. சமநில விலை உருவாகும்.
4. கேள்வி குறையும் 5. நிரம்பல் அதிகரிக்கும்.

12. பூரண நெகிழ்வு நிரம்பலில் சமநிலையடைந்திருக்கும் பொருளொன்றின் மீது அலகு வரி விதிக்கப்படுமாயின்,
1. வரிச்சுமை முழுவதும் உற்பத்தியாளரால் தாங்கப்படும்.
2. சமநிலை அளவுகள் மாறாமல் இருக்கும்
3. அரச வரிவருமானம் பூச்சியமாகும்.
4. புதிய சமநிலை விலை அலகு வரிக்கு சமனாக அதிகரிக்கும்.
5. சமநில விலையில் ஏற்படும் வீழ்ச்சி அலகு வரியின் அளவுக்கு சமனாக அமையும்.

13. அரசு, உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கும் போது சமூக நலனில் ஏற்படுத்தும் தாக்கம் என்பது,
1. மானியம் பெறும் துறையின் முதலீடு வேகமாக அதிகரிக்கும்.
2. வரிச்சலுகையிலும் பார்க்க மானியச் செலவு அதிகரிக்கும்.
3. மானியம் வழங்குவது வரி அறவீடு செய்வதன் மூலமாகும்.
4. மானியம் பெறுவோர் உண்மையாக பெறுவதற்கு பொருத்தமற்றோராக விருத்தல்.
4. மானியம் பெறுவோர் மற்றும் வரிசெலுத்துவோர் சமூக உறுப்பினர்களாக இருப்பதாகும்.

14. பின்வரும் வரைபின் மூலம் காட்டப்படுவது இழிவு விலை நிர்ணயம் மூலம் குறை நிரப்பு கொடுப்பனவு செய்யப்படுவதால் ஏற்படும் பொருளாதார விளைவு பற்றியதாகும்.



இப்பொருள் தொடர்பாக அரசு தாங்கக் கூடிய செலவு மற்றும் நுகர்வோர் கொள்வனவு செய்யும் போது ஏற்படும் செலவு முறையே,

1. ரூ. 1000/- மற்றும் ரூ. 1875/-
2. ரூ. 785/- மற்றும் ரூ. 1000/-
3. ரூ. 1000/- மற்றும் ரூ.750/-
4. ரூ. 1500/- மற்றும் ரூ. 1000/-
5. ரூ. 1875/- மற்றும் ரூ. 1000/-

15. குறைந்து செல்லும் எல்லை விளைவு தொழிற்பட ஆரம்பிக்கும் போது உள்ளீட்டின்,
1. மொத்த வெளியீடு உச்சத்தை அடையும்.
2. எல்லை உற்பத்தி பூச்சியமாகும்.
3. எல்லை உற்பத்தி அதிகரிக்கும்.
4. எல்லை உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்லும்.
5. சராசரி உற்பத்தி அதிகரித்துச் செல்லும்.

16. நிறைபோட்டி நிறுவனமொன்று குறுங்காலத்தில் ஏற்கக்கூடிய செலவுகளில் மூழ்கிய செலவாகக் கருதக் கூடியது.
1. இயந்திர உபகரணமொன்றின் கொள்வனவுச் செலவு
2. ஊழியர் சம்பளம் செலுத்தல்
3. மூலப்பொருள் கொள்வனவு
4. போக்குவரத்துச் செலவு
5. பயிற்றுவித்தல் செலவு

17. நிறைபோட்டி சந்தையமைப்பொன்றின் பண்பாக அமைவது,
1. குறுங்காலத்தில் எப்போதும் சாதாரண இலாபம் உழைக்கும்.
2. நிறுவனங்கள் சில பொருட்களை நிரம்பல் செய்யும்.
3. நிறுவனங்கள் ஓரியனத்தன்மைவாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும்.
4. சந்தை நுழைவு தடையாக இருக்கும்.
5. நிறவனங்கள் விலை ஒழுங்குபடுத்தல் மூலம் இலாபத்தினை உச்சப்படுத்தும்.

18. பிஸ்கற் உற்பத்தி நிறுவனமொன்று புதிய பிஸ்கற் வகையொன்றை அறிமுகம் செய்து சந்தை அமைப்பினுள் இயற்கைத் தனியுரிமையை பேணும்போது, இந்நிறுவனத்திற்கு இயற்கைத் தனியுரிமை பேணுவதற்கு ஏதுவான காரணி
1. அந்நிறுவனம் மட்டும் சந்தையில் அங்கம் வகித்தல்.
2. பெருமளவு முதலீட்டுடன் உட் பிரவேசித்தல்
3. உற்பத்தியில் பாரியளவு சிக்கனம் உருவாகல்.
4. உச்ச வினைத்திறன் கொண்ட மூலதன உபகரணம் பயன்படுத்தல்
5. பிரதான உள்ளீட்டு உரிமையை முழுமையாக நிறுவனம் கொண்டிருத்தல்.

19. கற்பிதமான பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கீட்டுத் தரவுகள் வருமாறு,

	ரூ. மி
அடிப்படை விலையில் மொத்த உற்பத்தியின் தேறிய பெறுமதி	10800
மொத்த தொழிற்பாட்டு மிகை	2200
ஊழியர் வேதனம்	5000
இடைநில நுகர்வு	4300
உற்பத்தி மற்றும் இறக்குமதி வரி	1300

அடிப்படை விலையில் மொத்த சேர்க்கப்பட்ட பெறுமதி
1. ரூ. 6500 மி. 2. ரூ. 5600 மி 3. ரூ. 5200 மி. 4. ரூ. 8600 மி. 5. ரூ. 7300 மி.

20. தேசிய கணக்கீடு ஒழுங்கு செய்யும் போது போக்குவரத்து மற்றும் வியாபார தீர்வை பயன்படுத்தப்படுவது.
    1. சந்தை விலையில் கணிப்பிடப்பட்ட உற்பத்தியை உற்பத்தியாளர் விலைக்கு மாற்றுவதற்கு.
    2. உற்பத்திவிலையில் மதிப்பிடப்பட்ட கூட்டப்பட்ட பெறுமதியை அடிப்படை வலைக்கு மாற்றுவதற்கு
    3. அடிப்படை விலையில் கணிப்பிடப்பட்ட உற்பத்திப் பெறுமதியை சந்தை விலைக்கு மாற்றுவதற்கு
    4. உற்பத்தியாளர் விலையில் மதிப்பீடு செய்யப்பட்டு கூட்டப்பட்ட பெறுமதியை கொள்வனவாளர் விலைக்கு மாற்றுவதற்கு
    5. அடிப்படை விலையில் கணிப்பீடு செய்யப்பட்ட கூட்டப்பட்ட பெறுமதியை உற்பத்தியாளர் விலைக்கு மாற்றுவதற்கு

21. நாடொன்றின் வளங்களின் திரட்சியினது பயண்பாடு என்பது.
    1. மொத்த தேசிய உற்பத்தி + இறக்குமதி
    2. மொத்த தேசிய உற்பத்தி + ஏற்றுமதி - இறக்குமதி
    3. விவசாய துறை கூட்டிய பெறுமதி + கைத்தொழில் துறை கூட்டிய பெறுமதி - ஏற்றுமதி
    4. அரச நுகர்வு செலவு + குடும்ப நுகர்வு செலவு + முதலீட்டு செலவு + இறக்குமதி
    5. நுகர்வுச் செலவு + முதலீட்டு செலவு + எற்றுமதி - இறக்குமதி

22. ஒரு நாட்டிடின் மொத்த தேசிய செலவு மொத்த தேசிய உற்பத்தியை விட அதிகமாக இருப்பதற்கு பின்வருவனவற்றில் எக்காரணி அடிப்படையாக அமையும்?
    1. வெளிநாட்டு தேறிய முதன்மை வருமானம் எதிர்க்கனிய பெறுமதி யாகும் போது.
    2. தேறிய ஏற்றுமதி எதிர்க்கனியமாகும் போது
    3. தேறிய ஏற்றுமதி நேர்க்கனியமாகும் போது
    4. வெளிநாட்டு தேறிய முதன்மை வருமானம் நேர்க்கனியமாகும் போது
    5. வெளிநாட்டு தேறிய இரண்டாம் நிலை வருமான மீதி நேர்க்கனிய பெறுமதியாகும் போது.

23. சமநிலை வருமான தேசிய வருமான வளையியின் குறுக்கே நுகர்வுக்கோடு வெட்டும் புள்ளியில் எல்லை நுகர்வு நாட்டம்.
    1. 1 ற்கு குறைந்த பெறுமதி பெறும்
    2. 1 ற்கு கூடிய பெறுமதி பெறும்
    3. 1 ற்கு சமனாகும்
    4. பூச்சியமாகும்.
    5. மேற்குறிப்பிட்ட எதுவும் நடைபெறாது.

24. நாடொன்றின் நிறைதொழில் மட்ட வருமானத்தில் பணவீக்க இடைவெளி உருவாகுவது.
    1. மொத்த நிரம்பலுக்கு மேலே மொத்த கேள்வி அதிகரித்தல்
    2. சம்பள அதிகரிப்பை விட விலை மட்டம் அதிகமாக இருத்தல்.
    3. திட்டமிடப்பட்ட முதலீட்டிலும் திட்டமிட்ட சேமிப்பு அதிகமாகவிருத்தல்.
    4. தேசிய உற்பத்தியை விட தேசிய வருமான அதிகரிப்பு கூடியதாகவிருத்தல்.
    5. சம்பள அதிகரிப்பை விட விலைமட்ட அதிகரிப்பு குறைவாகவிருத்தல்.

25. எளிய பொருளாதாரமொன்றின் சுயாதீன நுகர்வு பூச்சியம் என கருதி எல்லை நுகர்வு நாட்டம் 0.8, முதலீடு 2000 எனவும் கருதுக. இப்பொருளாதாரத்தின் சமநிலை வருவாய்.
    1. ரூ. 1,000 2. ரூ. 8,000 3. ரூ. 9,000 4. ரூ. 10,000 5. ரூ. 15,000

26. பணக்கேள்விக்கோடு இடமிருந்து வலமாக கீழ்நோக்கி சரிந்து செல்லக் காரணம்.
    1. கொடுக்கல் வாங்கல் நோக்க பணக்கேள்வி
    2. பாதுகாப்பு நோக்க பணக் கேள்வி
    3. உத்தேச நோக்க பணக்கேள்வி
    4. பணக்கேள்விக்கும் சராசரி/பொது, விலை மட்டத்திற்கும் எதிர்த்தொடர்பு விதி காணப்படல்.
    5. பணநிரம்பல் மற்றும் விலை மட்டத்திற்குமிடையே எதிர்த்தொடர்பு விதிகாணப்படல்.

27. பின்வரும் சொத்துக்களில் மிகவும் திரவத்தன்மை வாய்ந்த சொத்து.
    1. காசோலை 2. சேமிப்பு வைப்பு 3. நிலையான வைப்பு
    4. கேள்வி வைப்பு 5. திரைசேரி உண்டியல்

28. நாடொன்னின் பணவட்டி வீதம் 16% ஆகும் போது பணவீக்க வீதம் 12% இந்நாட்டின் மெய்வட்டி வீதம் எவ்வளவாகவிருக்கும்
    1. 0.0% 2. -28% 3. -4% 4. 28% 5. 4%

29. வணிகவங்கியொன்றில் 10,000 மி. ரூபாய் மிகை ஒதுக்கும் 80,000 மி. ரூபாய் வைப்பும் காணப்படுகின்றன. ஒதுக்குவீதம் 25% ஆயின் இவ்வங்கியிலுள்ள ஒதுக்கினை மற்றும் கடன் வழங்கல் நிறைவுறும் போது வங்கி முறைமைக்குள் உருவாகக் கூடிய கடனின் அளவு -

கடனினளவு	உண்மை ஒதுக்கு மி. ரூ
1. 40000 மி. ரூ	30,000 மி. ரூ
2. 100,000 மி. ரூ	25,000 மி. ரூ
3. 40,000 மி. ரூ	10,000 மி. ரூ
4. 30,000 மி. ரூ	40,000 மி. ரூ
5. 80,000 மி. ரூ	20,000 மி. ரூ

30. இலங்கை மத்திய வங்கியால் வணிக வங்கிகளுக்குரியதாக நிர்ணயிக்கப்படும் சட்டரீதியான ஒதுக்குவீதம் 40% ஆயின் வைப்பாக்கப் பெருக்கியின் பெறுமதி எவ்வளவு?
1. K = 10 2. K = 2.5 3. K = 4 4. K = 2 5. K = 20

31. இலங்கை மத்தியவங்கி, கொள்கை வட்டி வீதத்தினை அதிகரிக்கும் போது பின்வரும் எவ்விளைவு தாக்கம் செலுத்தும்?
1. பணநிரம்பல் வீழ்ச்சியடையும்போது வட்டி வீதம் அதிகரிக்கும்.
2. பணநிரம்பல் அதிகரிக்கும் போது வட்டி வீதம் அதிகரிக்கும்.
3. பணக்கேள்வி அதிகரிக்கும் போது வட்டி வீதம் வீழ்ச்சியடையும்.
4. பணக்கேள்வி, வட்டி வீதம் மற்றும் பணநிரம்பல் அதிகரிக்கும்.
5. பணநிரம்பல் வீழ்ச்சியுற்று வட்டி வீதம் அதிகரிக்கும்.

32. இலங்கை மத்திய வங்கியில் வணிக வங்கிகளுக்கு முறிகளை விநியோகிக்கும் போது,
1. முதலாம் தரச்சந்தையில் வட்டி வீதம் வீழ்ச்சயடையும் போது வட்டி வீத செல்வழி உச்சஎல்லையை தீர்மானிக்கும்.
2. முதலாம் தர கடன் சந்தையில் வட்டி வீதம் அதிகரிக்கும் போது வட்டி வீதம் செல்வழி இழிவு எல்லையைத் தீர்மானிக்கும்.
3. முதலாம் தரச் சந்தையில் வட்டி வீதம் மாறாமல் இருக்கும் போது வட்டி வீத செல்வழி இழிவு எல்லையைத் தீர்மானிக்கும்.
4. முதலாம் தர சந்தையில் பாதிப்பொன்றும் ஏற்படமாட்டாது.
5. வட்டி வீதச் செல்வழியில் பாதிப்பொன்றும் ஏற்படமாட்டாது.

33. வணிக வங்கியொன்றின் சொத்தாக எது கருதப்படுகிறது.?
1. கேள்வி வைப்பு மற்றும் பெற்ற கடன்கள்.
2. பங்கு மூலதனம் மற்றும் நிலயான வைப்புகள்
3. தவணை வைப்பு மற்றும் சேமிப்பு வைப்புகள்
4. மத்திய வங்கியிடமிருந்து கிடைக்கக் கூடிய காசு மற்றும் கடன் கொடுப்பனவுகள்.
5. கடன் பெறல் மற்றும் பங்கு மூலதனம்.

34. மத்திய வங்கியின் தொகைக் கடன் கட்டுப்பாட்டு கருவிகளில் ஒன்றாக அமைவது,
1. கடன் பத்திர காசு எலலை நிர்ணயம்
2. நன்னெறி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.
3. பல்முறைகளில் வட்டி வீதங்களை நிர்ணயம் செய்தல்.
4. பல்வேறு கடன் முறிகளை வெளியிடல்
5. திறந்த சந்தையில் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தலும் கொள்வனவு செய்தலும்.

35. நுகர்வில் போட்டியும் நுகர்வினை வரையறுக்க முடியாததுமான பண்டவகை.
1. அரைப்பொதுப் பண்டம் 2. பொதுப்பண்டம் 3. பொதுவளம்
4. மேன்மைப்பண்டம் 5. தனியார் பண்டம்.

36. சந்தையொன்றில் பண்டமொன்றின் உற்பத்தியின் போது சமூக உத்தம உற்பத்தியைவிட சந்தை உத்தம உற்பத்தி அதிகமாகும் போது – பெறக் கூடிய முடிவு.
1. பொருளை உற்பத்தி செய்யும் போது உற்பத்தியில் பெருமளவு மறைவெளிவாரி ஏற்படல்.
2. பொருளை உற்பத்தி செய்யும் போது உற்பத்தியில் பெருமளவு நேர்வெளிவாரி ஏற்படல்.
3. பொருளை நுகரும் போது பெருமளவு நேர்வெளிவாரி ஏற்படல்
4. பொருளை நுகரும் போது பெருமளவு மறைவெளிவாரி ஏற்படல்.
5. பொருளை நுகரும் போது சமூக நன்மை மறை பெறுமதியில் அதிகரித்தல்.

37. இன்றைய நிலையில் இலங்கையில் வரிவருமானத்தில் பெருமளவு உள்ளடங்கும் வரி வகை.
1. செலவீட்டு வரி 2. வருமான வரி 3. உற்பத்தி வரி
4. பெறுமதி சேர்வரி 5. இறக்குமதி வரி

38. இன்றைய நிலையில் இலங்கையில் நடைமுறைச் செலவில் பெருமளவு உள்ளடங்கும் செலவு வகை.
1. பொருட்கள் சேவைகள் மீதான செலவு 2. வட்டிக் கொள்வனவு
3. சம்பளமும் வேதனமும் 4. நடைமுறை ஒப்படைச் செலவு
5. குடும்ப தொழிற்பாட்டு செலவு

39. அரச பாதீட்டில் முதன்மைக் கணக்குமீத என்பது
1. அரச மொத்த வருமானத்தற்கும் நடைமுறைச் செலவுக்குமிடையிலான வேறுபாடு
2. அரச மொத்த வருமானத்தில் மொத்தச் செலவை கழிக்கும் போது பெறப்படும் மீதி
3. அரச மொத்த வரவிலிருந்து கடன் மீழ் செலுத்தல்களை கழித்த பின்னரான மீதி
4. அரச வரிவருமானம் மற்றும் நடைமுறைச் செலவு இடையிலான மீதி
5. வரவு செலவுத்திட்ட மீதியில் வட்டி கொடுப்பனவுகளை கழித்த பின்னரான தேறிய மீதி

40. 2018 ம் ஆண்டில் இலங்கையின் மொத்த அரசவருமானம் மற்றும் மொத்த அரச செலவு என்பன மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்களிப்பு வீதம்.(%)

	அரசவருமானம்	அரச செலவு
1.	18.6	13.3
2.	11.9	14.5
3.	13.3	18.6
4.	14.3	13.6
5.	14.5	11.9

41. தேய்வு வீத வரி என்பது,
1. உயர் வருமானம் பெறுவோர், குறைந்த வருமானம் பெறுவோர் செலுத்தும் வரியை விட குறைந்த வரியளவு செலுத்துவர்.
2. சகல வரி செலுத்துவோரும் அவர்களது வருமானத்தில் சமவளவை வரியாக செலுத்துவர்.
3. உயர்வருமானம் பெறுவோர், குறைந்த வருமானம் பெறுவோன் செலுத்தும் வரியளிட அதிகளவு வரி செலுத்துவர்.
4. வருமானம் அதிகரிக்கும் போது செலுத்தும் வரி வீதமும் அதிகரிப்பதாகும்.
5. வருமானம் அதிகரிக்கும் போது அல்லது வீழ்ச்சியடையும் போது சமமான வரி வீதம் செலுத்துதல்.

42. அதிவேகப்பாதை அமைப்பதால் தனிப்பட்ட செலவு 80 பில்லியன் தனியார் நன்மை 120 பில்லியன் வெளிவாரிச் செலவு 125 பில்லியன் மற்றும் வெளிவாரிச் செலவு 70 பில்லியன் காணப்படும் போது இச் செயற்திட்டத்தின் சமூகச் செலவு சமூக நன்மை இடையே வேறுபாடு எவ்வளவு?
1. 40 பி. ரூ 2. 95 பி. ரூ 3. 5 பி. ரூ
4. 15 பி. ரூ 5. 30 பி. ரூ

43. பேணத்தகு அபிவிருத்தியின் பிரதான பண்புகளில் ஒன்று
1. சமூக அந்தஸ்தை உயர்த்துதல், சூழலை பாதுகாத்தல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி
2. வருமான ஏற்றத்தாழ்வை குறைத்தல், வளங்களை பாதுகாத்தல் மற்றும் சமூக அபிவிருத்தி
3. பேணத்தகு சூழல் பாதுகாப்பு, மற்றும் சமூகப் பாதுகாப்பு
4. வேலையின்மை குறைத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தல்
5. அறிவு, திறன் மற்றும் சமூகத் தரத்தினை உயர்த்துதல்.

44. சர்வதேச வர்த்தகத்தில் ஒப்பீட்டு நய கோட்பாட்டின் படி கவனம் செலுத்துவது.
1. இழி செலவு நியதி 2. இழிவு வினைத்திறனின்மை நியதி
3. இழிவு அமயச் செலவு நியதி 4. உச்சபயன் நியதி
5. உற்பத்தி வினைத்திறன் நியதி

45. யப்பான் மற்றும் இலங்கையிடையே, வெளியீட்டு பொருள் அலகொன்றை பரிமாற்றிக் கொள்ளும் உள்ளீட்டு ஊழிய மணித்தியாலங்கள்.

பொருள்	யப்பான்	இலங்கை
மோட்டார் சைகில்	40	20
மிதிவண்டி	50	80

இவ்வட்டவணையிலிருந்து சர்வதேச வர்த்தக ரீதியாக எடுக்கக் கூடிய முடிவு,
1. இரு பொருட்கள் தொடர்பான முழு நன்மையை யப்பான் பெறும்.
2. இரு பொருட்கள் தொடர்பான முழுநன்மையை இலங்கை பெறும்.
3. சைகில் உற்பத்தி முழு நன்மை இலங்கைக்குரியது.
4. மோட்டார் சைகில் உற்பத்தி முழு நன்மை யப்பானுக்கு உரியது.
5. மோட்டார் சைக்கிள் உற்பத்தி முழு நன்மை இலங்கைக்குரியது.

46. அண்மைய ஆண்டுகளில் (2018) இலங்கையின் பிரதான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகப்போக்கில் கூடிய பங்களிப்பு நாடுகள்.

	ஏற்றுமதி	இறக்குமதி
1.	ஐக்கிய அமெரிக்கா	சீனா, சிங்கப்பூர்
2.	சீனா, இந்தியா	ஐக்கிய அமெரிக்கா
3.	ஐக்கிய அமெரிக்கா	இந்தியா, சீனா
4.	ஐரோப்பிய சங்கம்	ஐக்கிய அமெரிக்கா
5.	ஐக்கிய அமெரிக்கா	சீனா

47. ஒரு நாட்டின் ஏற்றுமதிவிலை 20% ஆல் அதிகரித்த போது வர்த்தக மாற்று வீதம் 25% ஆல் வீழ்ச்சயடையும் ஆயின் இறக்குமதி விலை,
1. 60% ஆல் அதிகரிக்கும்
2. 160% ஆல் அதிகரிக்கும்
3. 25% ஆல் வீழ்ச்சியடையும்
4. 16% ஆல் அதிகரிக்கும்
5. 60% ஆக இருக்கும்

48. 2018 இல் இலங்கையின் ஏற்றுமதி கட்டமைப்பு சரியாக காட்டப்படும் விடை,

	விவசாயம்%	கைத்தொழில்%	கனிப்பொருள்%
1.	18.7	78.8	2.5
2.	20.5	79.2	0.3
3.	26.5	72.9	0.6
4.	21.7	77.9	0.3
5.	22.7	76.9	0.4

49. சர்வதேச வர்த்தக போட்டி நன்மை அடிப்படையின் சில கீழ்வருமாறு அதன் செலவு நன்மை அடிப்படையாக அமைவது.
1. தரமான உயர் நன்மை பெறும் உற்பத்தியை உருவாக்கல்
2. கொள்வனவு பயன்பாடு மிக உயர் மட்டத்தில் இருத்தல்
3. சிகிச்சை கருதி செயற்படல்
4. ஆக்க உரிமைச் சொத்து உரிமையாக்கல்.
5. பேற்றன் உரிமைச் சொத்து உருவாக்கல்.

50. இலங்கையின் வர்த்தக மாற்று வீதம் பாதகமாகும் சந்தர்ப்பம்
1. ஏற்றுமதி வருமானம் இறக்குமதி செலவை விட வேகமாக அதிகரித்தல்.
2. ஏற்றுமதி விலை இறக்குமதி விலையை விட வேகமாக அதிகரித்தல்.
3. ஏற்றுமதி அளவு இறக்குமதி அளவை விட வேகமாக அதிகரித்தல்.
4. இறக்குமதி விலை ஏற்றுமதி விலையிலும் அதிகமாக இருத்தல்.
5. இறக்குமதி அளவு ஏற்றுமதி அளவிலும் வேகமான அதிகரித்தல்.